2003 மார்ச் 24]

47—

மகளிர் கலைக் கல்லூரி

•6696—திரு. பி.எஸ். அருள்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, லால்புரத்தில் மகளிர் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் தற்போதைய கொள்கையின்படி அரசு கலைக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக Constituent Unit ஆக மாற்றப்பட்டுள்ளன. இதன்படி கல்லூரிகளை நடத்துகின்ற முழு பொறுப்பும் பல்கலைக்கழகங்களையே சார்ந்திருக்கிறது. இதுபோன்று தேவையின் அடிப்படையில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை நிறுவும் அதிகாரம் அந்தந்தப் பகுதி பல்கலைக்கழகங்களுக்கே உரியது. தற்போதுள்ள பல்கலைக்கழக நிதி நெருக்கடியில், லால்புரத்தில் மகளிர் அரசு கலைக்கல்லூரி தொடங்குவதற்கான வாய்ப்பில்லை.

முற்பகல் 10-30

திரு. பி.எஸ். அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திலிருந்து சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சி. முட்லூர் கிராமத்தில் அரசு கலைக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. அந்தக் கலைக் கல்லூரியில் ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து படிக்கின்ற ஒரு நிலை இருந்து வருகிறது. அந்தக் கல்லூரி தொடங்கப்பட்ட 1987-லிருந்து, 1988, 1989 ஆண்டுகளைத் தவிர மற்ற ஆண்டுகளில் அந்தக் கலைக் கல்லூரியை காவல் துறையினரை வைத்துக்கொண்டுதான் தினந்தோறும் நடத்துகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு முக்கிய காரணம், அது கிராமப் பகுதியிலே அமைந்திருக்கிற காரணத்தினாலும், அங்கு மாணவர்களுக்குள் ஏற்படுகின்ற பல பிரச்சினைகளினாலும், மாணவியர்களுடைய கல்வித் தரம் அங்கே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், அக்கல்லூரி கிராமப்புறத்திலே அமைந்திருந்ததாலும், சிதம்பரம் அரசு கலைக் கல்லூரி என்றுதான் அதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. எனவே, லால்புரம் கிராமத்தில் சிதம்பரம் நகராட்சிக்குச் சொந்தமான 60 ஏக்கர் நிலம்,

[2003 மார்ச் 24

தரிசு நிலம் அங்கு இருக்கின்ற காரணத்தினால், இந்த அரசு மறுபரிசிலனை செய்து தனியாக மகளிர் கல்லூரி அமைப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளே இல்லாத பின்தங்கிய பகுதி, பெண்கள் கல்விக்கு முன்னுரிமை, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தேவையின் அடிப்படையில் அந்தப் பல்கலைக்கழகங்களே புதியதாக கல்லூரிகளைத் தொடங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. அல்லது அரசின் நிதியுதவியின்றி சுயநிதி அடிப்படையில் மகளிர் கல்லூரி தொடங்க அனுமதி கோரும் விண்ணப்பங்கள், தனியார் கல்வி முகமைகளிடமிருந்து பெறப்பட்டால், அரசினுடைய பொறுப்பு, அரசினுடைய கடமை, தடையின்மைச் சான்று வழங்குவது மட்டும்தான். எனவே, அப்படிப்பட்ட கோரிக்கைகள் பெறப்படுகின்றபோது, அவற்றின் தகுதி அடிப்படையில் தடையின்மைச் சான்று வழங்குவது குறித்து அரசு நிச்சயமாக பரிசிலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

48—

விடுதிகள்

•7849—திரு. கி. பாரிமோகன்:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகள் எத்தனை?

(ஆ) எந்தெந்த விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன? சொந்தக் கட்டடத்திற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி தொகுதியில் 6 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும், 5 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும் ஆக மொத்தம் 11 விடுதிகள் இயங்குகின்றன.